பொது சன நூலகம்
மாநகராட்சி மன்று
02-10-1992
யாழ்ப்பாணம்

பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 118 இதழ் : 22 02—10—1992 மாநகரசபை ... சிறப்பு இதழ் விலை ரூபா 3-50

## 21 பேருக்கு முத்திப்பேறு பட்டம்

கடந்த ஞாயிறு 27.09.92 அன்று வத்திக்கான் புனித இராயப்பர் சதுக்கத்தில் நடந்த திருவழிபாட்டு வைபவம் ஒன்றில் 21 இறைஅடியார்க்கு [illegible] 2ஆம் அருள் சின்னப்பர் முத்திப்பேறு பட்டம் அளித்தார்.

சத்திர சிகிச்சையின் பின்னர் கோடை விடுமுறை இல்லமாகிய காஸ்ரல் கொண்டால் போவிலிருந்து சனிக்கிழமை மாலை முதன்முறையாக வத்திக்கான் நகருக்கு திரும்பிய பரிசுத்த தந்தை ஞாயிறு காலை நிறைவேற்றிய திருப்பலியில் பல ஆயிரக்கணக்கான விசுவாசிகள் கலந்து கொண்டனர்.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

# அரசியல் தலைவர்களில் இந்நாடு நம்பிக்கை இழந்துவிட்டது!

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள்......

"போர் தொடுத்துக்கொண்டு மக்கள்மேல் சொல்லொணாத் துன்பங்கள் சுமத்தப்படும் இவ்வேளையில், அரசாங்கமும் எதிரணியும் தங்கள் பிடியை கைநெகிழ்ந்து விட்டவர்களாகத் தோன்றுகின்றனர். அதன் பயனாக எவருக்கும் பதில் சொல்லும் பொறுப்பற்றவர்கள் போல் இருக்கும் அரசியல் தலைவர்களில் இந்தத் தேசம் நம்பிக்கை இழந்ததுபோல் தெரிகிறது."

இவ்வாறு கடந்த 5ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் வடக்கு கிழக்கில் நடந்து கொண்டிருக்கும் போர் நிலைமையை விமர்சித்து இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை கருத்தை வெளியிட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம், மன்னார் திருகோணமலை, மட்டக்களப்பு மறைவட்ட ஆயர்கள் உட்பட 12 ஆயர்கள் கைச்சாத்திட்ட நீண்ட அறிக்கையில் போரைப்பற்றி மேலும் கூறுவதாவது,

வடக்கு–கிழக்கில் நடக்கும் போர் ஓர் முடிவின்றி இழுபட்டுக் கொண்டிருக்கிறது அதனால் மனிதஉயிர்களுக்கும் வளங்களுக்கும் பெரும் இழப்புண்டாகிறது. ஒரு நிரந்தரமான, விரைவான தீர்வைக் காண்பதற்கு அரசியல் மட்டத்திலான தீர்க்கமான மனத்துணிவு இருப்பதற்குஓர் ஆதாரமுமில்லை. இக் குறைபாட்டுக்கு எல்லா அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் பொறுப்பு ஏற்கவேண்டியவர். நாட்டின் நலங்களுக்காக தங்கள் கட்சி அரசியல் நலன்களை மட்டும் நோக்குவதை விட்டு விட்டு அவர்கள் தேசத் தலைவர்களாகமாறி எங்கள் அன்பார்ந்த தேசத்தை மேலதிக பேரழிவிலிருந்து காப்பாற்றச் செயலில் இறங்க

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

விடுதலைப் பாதையில்

## மரணம் ஓர் மகத்தான விழா

சுதந்தரத்தின் பாதையில் மரணம் ஓர் மகத்தான விழாவாய் இருக்கின்றது என்று கடந்த வியாழன் 24.09.92 அன்று யாழ். நகரில் நடந்த யாழ். றோட்டரிக் கழக ஒன்று கூடலில், முன்னாள் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபரும், தற்போதைய தென் இந்திய திருச்சபை இறையியல் குருமட இயக்குநருமான திருவாளர் A. ராஜன் கதிர்காமர் இளமை என்னும் தலைப்பில் கருத்துச் செறிந்த சொற்பொழிவாற்றுகையில் கூறினார். எவ்வித அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெற விரும்பும் ஒருவன், கட்டுப்பாடுள்ள ஒழுக்கம், சரியானதைச் செய்யும் செயல் திறன், துன்பங்களை அனுபவிக்கும் மனப்பாங்கு, சாவை ஏற்றுக் கொள்ளும் மனத்திடன் என்னும் நாலு நிலைகளூடாக செல்லவேண்டும் என்றும் மேலும் கூறினார்.

## சிறிலங்கா சமூகநோய்களால் பாதிப்படைகிறது

— கொழும்பு மறைமாவட்டப் பேராயர்

சிறிலங்கா நோயுற்ற ஒரு சமுதாயமாக மாறியிருப்பதற்கு நாடெங்கும் அறிகுறிகள் காணப்படுகின்றன என்பது குறித்து தன் வருத்தத்தை கொழும்பு பேராயர் தெரிவித்தார். போர், லஞ்ச ஊழல், ஊழல், பயங்கரவாதம், உலகாயுதப் போக்கு ஆகிய சமூக நோய்களால் நாடு பாதிப்படைகிறது என்று கூறிய பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ போரினால் ஆயிரக்கணக்கானோர் மடிகின்றனர் அல்லது உறைவிடமின்றி விடப்படுகின்றனர் என்று குறிப்பிட்டார். தேவத்தையில் உள்ள லங்கா மாதா ஆலயத்தில் குணப்படுத்தும் திருவழிபாட்டுக்குக்கூடியிருந்த 50 ஆயிரத்திற்கு மேலான திருயாத்திரிகளுக்கு உரையாற்றிய பேராயர் அவர்கள் அழியக் கூடிய பொருட்கள் மீதான பேராசை, பிரச்சனைகளை உருவாக்கி இருக்கின்றது. அமைதி மற்றும் இணக்கத்தைத் தேடுவதற்கு கிறிஸ்துவின் வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தேவத்தையில் 1941 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக் குணப்படுத்தும் வழிபாடு ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் மாத இறுதி ஞாயிறன்று நடத்தப்படுகின்றது.

## இதயபூர்வமான ★ நன்றி ★

கடந்த 20 ஆண்டுகளாக முன்னாள் யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் ஆட்சிக்காலத்தில் யாழ். மறைவட்டக் குருமுதல்வராக அரும் பெரும் பணிகள் பல ஆற்றிய அதி வண. S.A. மைக்கல்சாமி O.M.I அடிகளாருக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக, அவரின் பெயர் கொண்ட புனிதரின் தினமாகிய 29.09.92 அன்று யாழ். மறைவட்டக் குருக்களால் 'நன்றி ஆராதனை வழிபாடு' ஒழுங்கு செய்யப்பட்டது.

கொழும்பில் நடந்த கூட்டத்தில்

## குழந்தைகளின் வாழ்வை மேம்படுத்த வாக்குறுதி

இரண்டாயிரம் ஆண்டிற்குள் தென்னாசியாவில் அனைத்து சிறுவர் சிறுமியருக்கும் சொத்து, குடியுரிமை வழங்கும் தீர்மானத்தை அப்பகுதியில் உள்ள 7 நாடுகள் வெள்ளியன்று நிறைவேற்றின. தென்னாசிய நாடுகளின் 45 கோடி குழந்தைகளின் வாழ்க்கை நிலைகளை மேம்படுத்தல் முகமாக அந்நாடுகள் கொழும்பில் நடந்த கூட்டத்தில் வாக்குறுதியளித்தன. எதிர்வரும் 3 ஆண்டுகளில் தென்னாசியாவில் 80 வீதம் குழந்தைகள் துவக்கப்பள்ளியில் பயில வழி செய்யவும், 95 வீதமானோருக்கு நோய்த் தடுப்பூசி ஏற்றவும் அக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

## நீதிக்காக போராடும் தேவை

தென்னாபிரிக்க மண்டலக் குருக்கள் தென்ஆபிரிக்காவை மீண்டும் நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கும் வன்முறைகள் பற்றிய தங்கள் கவலையைத் தெரிவித்துள்ளனர். அக்குருக்கள் தென்னாபிரிக்காவில் அநீதியும் சமத்துவமின்மையும் அகற்றப் படாதவரை நீதிக்காகப் போராடும் தேவையும் மற்றும் வன்முறைகளும் இருந்து கொண்டே இருக்கும் என்று ஆண்டுக் கூட்டத்தில் கூறினர். அநீதிகள் ஏமாற்றங்கள் மற்றும் பயத்தை அகற்றுவதற்கான குருக்களின் பணியை விளக்கிய அவர்கள் அமைதிக்காக உழைக்க வேண்டிய அவசியத்தையும் குறிப்பிட்டனர்.

இலங்கையில்

## புதிய திட்டத்திற்கு கடனுதவி

ஆசியா, ஆபிரிக்கா, லத்தின், அமெரிக்கா ஆகிய அண்மைக் கிழக்கு நாடுகளின் 5 புதிய திட்டங்களுக்கென I.S.A.D 6 கோடிய 20 லட்சம் டொலர் கடனுதவிக்கு இசைவளித்துள்ளது. இலங்கையின் வடமேற்கு மாகாணத்தில் கிராமக் கடனுதவி நிதிக்கென I. S. A. D எனும் நிறுவனம் 88 லட்சம் 50 ஆயிரம் டொலர்களை வளங்க இருப்பதாக அறிவித்தது. ஒரு கோடி 80 லட்சம் டொலர் கொண்ட இத்திட்டத்திற்கான மீதித் தொகை ஜேர்மன் அரசும் இலங்கை அரசும் வளங்கும். விவசாய முன்னேற்றத்திற்

( தொடர்ச்சி 6 ஆம் பக்கம் )

## வன்முறையைக் கைவிட்டு புரிந்துணர்வுப் பாதையில் நடவுங்கள் ● — திருத்தந்தை

கடந்த வாரத்தில் தென் ஆபிரிக்காவில் பிஷோ என்ற இடத்தில் A. N. C. கட்சியாளர் 28 பேர் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து திருத்தந்தையின் ஆழ்ந்த கவலையை வெளியிடும் தந்தி ஒன்று தென் மண்டல ஆபிரிக்கத் தலத் திருச்சபைக்கு அனுப்பப்பட்டது. உயிர் இழந்தவர்களுக்கான ஜெபங்களையும், காயமடைந்தவர்கள் மற்றும் இறந்தவர்களுக்கான ஆறுதலையும் வழங்கும் திருத்தந்தை அனைத்துத் தரப்பினரும் வன்முறையைக் கைவிட்டு புரிந்து கொள்ளுதலும் ஒப்புரவும் இணக்க வாழ்வும் நிறைந்த பாதையில் நடந்து கொள்ள வேண்டும் என்று விண்ணப்பிப்பதாகவும் திருபீடத் தலைவரினால் அனுப்பப்பட்ட செய்தி கூறுகின்றது. நாட்டை வழி நடத்தும் பொறுப்பிலுள்ளோர் நீதி நிறைந்த வருங்காலத்திற்காக அமைதியும் ஜனநாயகமும் நிறைந்த பாதையைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் திருத்தந்தை அத்தந்தியில் விண்ணப்பித்துள்ளார்.

திருமறைக் கலாமன்றத்தில்

## வேதாகம வகுப்புகள்

மாதந்தோறும் மாதத்தில் வரும் முதல் ஞாயிறு வாரங்களில் மு. ப. 11-30 மணிக்கு, யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தில் "வேதாகம வகுப்புகள்" நடாத்த கலாமன்ற நிர்வாகிகள் ஒழுங்கு செய்துள்ளனர். தங்கள் திருமறை அறிவைப் பெருக்கிக்கொள்ள சிறப்பாக பொதுநிலையினருக்கு இவ்வகுப்புகள் பெரிதும் உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## எம்கருத்து

# விழிப்புணர்வு வேண்டும்

அக்டோபர் மாதம் மறைபோதக மாதம். இம்மாதத்தின் மையமாக அமைவதுதான் மறைபோதக ஞாயிறு நிகழ்ச்சிகள். இவ்வருடம் அக்டோபர் மாதம் மூன்றாம் ஞாயிறு (18-10-1992) அன்று திருச்சபை உலகளாவிய நிலையில் மறைபோதக ஞாயிற்றைக் கொண்டாடுகிறது. திருச்சபை வாழ்வில் இஃது ஓர் முக்கியமான நிகழ்ச்சி. இதற்கு நாம் எல்லோரும் நம்மைத் தயார் செய்து இயங்குவது இன்றியமையாதது.

மறைபோதக ஞாயிறு என்று சொன்னவுடன், பலருக்கு பல எண்ணங்கள் எழலாம்: பணம் தண்டல் செய்யவேண்டும், பொருள் திரட்ட வேண்டும், இவைகளை வேதபோதக நாடுகளின் தேவைகளுக்காக அனுப்பவேண்டும். ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டும். வேதபோதக நாடுகளுக்காகவும், அங்கு மறைப்பணி புரிபவர்களுக்காகவும் செபிக்கவேண்டும். பிள்ளைகளுக்கு தேவ அழைத்தல் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் ஊட்டவேண்டும். இவைபோன்ற இன்னும் பல கருத்துக்கள் நம் மனதில் எழலாம். இவை யாவும் வேண்டியவையே.

ஆனால் இவைதான் மறைபோதக ஞாயிறின் முக்கிய—முதன்மையான நோக்கம் என்று நாம் கருதினால் அங்குதான் இலக்குத் தவறுகிறோம்.

''மிஷன்'' ஞாயிறின் முக்கிய நோக்கம் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஓர் அப்போஸ்தலன், ஒரு ''மிஷனரி'' — அதாவது மீட்பின் நற்செய்தியை உலகில் பரப்ப ''அனுப்பப்பட்டவன்'' என்ற விழிப்புணர்ச்சியை ஊட்டுவதாகும். அதனை உணர்ந்தால் மட்டும் போதாது; உணர்ந்து ஆர்வமுடன் செயற்பட வேண்டும்.

இன்றைய மனிதனுக்கு நற்செய்தி அறிவிக்கும் பணி நாளுக்கு நாள் சிரமும் சிக்கலும் மிக்கதாகி வருகின்றது. இச் சூழ்நிலையில் ஆயர்கள், குருக்கள், துறவிகள் மட்டுமன்றி, ஒவ்வொரு கிறிஸ்தவனும் பல்வேறு வழிகளில் நற்செய்திப்பணி புரியவேண்டும். இப்பணியில் பொதுநிலையினர்க்குரிய தனிப்பட்ட சிறப்பிடமுண்டு. அதிக அளவில் தங்களை அப்பணியில் ஈடுபடுத்த வாய்ப்புகளையும், வழிவகைகளையும் ஆராய்ந்து, தங்களுக்குரிய இப்பணியை இவர்கள் தட்டிக் கழிக்காமல், முனைப்புடன் செய்ய முன்வர வேண்டும். இத்தகைய மேன்மையான இடத்தைப் பெற்றுள்ள பொதுநிலையினர் சிலர் இன்று நற்செய்தி அறிவிப்புப்பணியில் ஆக்க வேலைக்குப் பதிலாக அழிவு வேலையில் ஈடுபடுவது பரிதாபத்திற்குரியது.

ஒவ்வொருவரும் மறைப்போதகப் பணியில் கொள்ளவேண்டிய ஆர்வத்தை மறுபரிசீலனை செய்து, திருமறைக் கொள்கைகளை மக்களுக்கு தம் வாழ்க்கையாலும் — சொல்லாலும், செயலாலும், செபத்தாலும் — அறிக்கையிட்டு, திருச்சபை உறுப்பினர் அனைவரையும் இப்பணியில் ஈடுபடுத்துவோமாயின் பல குறைபாடுகள் நம்மைவிட்டு அகலும். இவ்வாறு செய்வோமாயின், நற்செய்தி அறிவிக்கும் ஆர்வமுள்ள கிறிஸ்தவ குழுக்கள், காலத்தின் தேவைக்கேற்ப புதிய அமைப்புக்கள் உருவாகும்.

ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும் ஒரு மறைபோதகத் தளமாக அமைய வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் மற்றவர்களுக்கு மறைபோதக உணர்வைத் தூண்டுபவராக வாழவேண்டும். விசுவாச வாழ்வும் செபமும் ஒருங்கிணைந்து செல்லவேண்டும். குடும்பசெபம் ஒரு குடும்பத்தின் வாழ்வில் இவ் உலகைப் புதிப்பிக்கும் வலுவுள்ள கருவியாகும். பெற்றோர் தங்கள் சொல்லாலும் செயலாலும் பிள்ளைகளுக்கு முன்மாதிரிகையாய் விளங்கி ஏழைகளுக்கு இரங்கும் பரிவு, அறியாமையில் வாடுவோருக்கு ஆதரவு, கிறிஸ்துவை இன்னும் அறியாதவருடன் கிறிஸ்துவ வாழ்வை பகிர்தல் ஆகிய பண்புகளுக்கு பிள்ளைகள்முன் சான்று பகரவேண்டும். இன்று கிறிஸ்தவ குடும்பங்களில் நற்செய்தி மதிப்பீடுகள் மங்காது விளங்குமேயானால், இத்தகைய மறைபரப்புப் பணியில் சக்திமிகுந்த இயக்கமாக மானிட சமுதாயத்தின் அடிப்படையாகிய குடும்பம் செயல்புரியும்.

# புரியாத புதிர்களா?

## கத்தோலிக்க வேதாகமம்

**ஒப்பற்ற நூல்.**

உலகப் புகழ்பெற்ற நூல்களுள் முதல்வரிசையில் வைக்கப்படும் நூல் திருமறை நூலாகும். முதல் முதல் அச்சேறிய நூலும் அதுவேயாகும். இந்நூலைப்போல் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட வேறு நூலில்லை. இந்நூலைக் கொண்டிராத நாடோ, இனமோ இன்று இல்லையென்றே சொல்ல வேண்டும். கிறிஸ்தவ சமுதாயம் ஆதியிலிருந்தே இந்நூலைத் தனது விசுவாசத்தின் ஆணிவேராய் எண்ணிவருகின்றது இதன் இத்தகைய சிறப்புக்குக் காரணம், இது இறைவன் தந்த நூலாய் இருப்பதே. இது இறை ஏவுதலால் எழுதப்பட்ட நூல்.

**ஒரு நூற் களஞ்சியம்.**

திருமறைநூல் ஒரு நூல் அன்று. ஆனால் அது ஒரு நூற் களஞ்சியம். பல நூற்றாண்டுகளாக எழுதப்பட்ட எழுபதுக்கும் அதிகமான நூல்கள் திருமறை நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

**பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும்**

திருமறை நூற்களஞ்சியம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் வருகைக்கு முன் எழுதப்பட்ட நூல்கள் பழைய ஏற்பாடு என்றும், கிறிஸ்துவின் வருகைக்குப் பின் எழுதப்பட்ட நூல்கள் புதிய ஏற்பாடு என்றும் பிரிக்கப்பட்டன.

**திருமறைநூல் எழுதப்பட்ட காலம்**

பழைய ஏற்பாட்டில் அடங்கியுள்ள நூல்கள் கி. மு. 700 முதல் கிறிஸ்துவின் பிறப்பு வரையுமுள்ள காலத்தில் எழுதப்பட்டவையாகும். புதிய ஏற்பாட்டில் அடங்கியுள்ள நூல்கள் கி. பி. 1ஆம் நூற்றாண்டு முடிவுக்கு முன் எழுதப்பட்ட நூல்களாகும்.

**எம்மொழியில் எழுதப்பட்டது?**

பழைய ஏற்பாட்டின் பெரும் பகுதி எபிரேய மொழியில் எழுதப்பட்டது. எபிரேய மொழியில் திருமறை நூல்கள் தோன்றி ஆண்டு பல ஆன பின் கிரேக்க நாகரிகம் உச்ச நிலையை அடைந்தது. கிரேக்க மொழியும் செல்வாக்குப் பெற்றது. இந்நிலையில் எபிரேய மொழியில் எழுதப்பட்ட திருமறை நூல்கள் பலருக்கு விளங்காதபடியால் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. இம்மொழி பெயர்ப்பு எழுபது பெயரால் செய்யப்பட்டது என்பர். ஆகவே அது ''செப்ருவாயின்ரா'' எழுபது (Septuaginta) என அழைக்கப்பட்டது. கி. மு. 3ஆம் நூற்றாண்டில் இக்கிரேக்க மொழிபெயர்ப்பு நூல் தோன்றியிருக்கலாமென்பர். நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் காலத்தில் இக் கிரேக்க திருமறை நூல் பழக்கத்தில் இருந்தது. இதிலிருந்தே நமதாண்டவரும் அப்போஸ்தலர்களும் மேற்கோள்களைக் கூறுகின்றனர்.

**புதிய ஏற்பாட்டு நூல்கள்** கிரேக்க மொழியிலேயே எழுதப்பட்டன.

கிரேக்க சாம்ராஜ்யம் சரிய, உரோமைய வல்லரசில் இலத்தீன் மொழி முதலிடம் வகித்ததால் அம்மொழியை அனைவரும்கற்றனர். இந்நிலையில் இம்மொழியில் திருமறை நூல்கள் திருச்சபைக்குத் தேவைப்பட்ட படியால் இலத்தீன் மொழியில் திருமறை நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன. இம்மாபெரும் பணியைச் செய்து முடித்தவர் புனித எரோணிமுஸ் என்பவராவர். இதுவே ''வுல்காத்தா'' (Vulgata) என்ற இலத்தீன் திருமறைநூலாகும்.

> **அடுத்த இதழில்**
> **2ஆம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் இறை வெளிப்பாடு பற்றிய மறைக் கொள்கைத் திரட்டு அதிகாரம் 1**

இந்த நூற்தொகுப்பில் இடம்பெறாத சில நூல்களும் திருமறை நூல்களாகக் கருதப்பட்டு திருச்சபையால் பயன்படுத்தப்பட்டு வந்தன. இறுதியாக திருமறை நூல்கள் எவை? அதாவது, இறை ஏவுதலால் எழுதப்பட்ட நூல்கள் எவை என்பதை கத்தோலிக்க திருச்சபை தனக்குக் கிறிஸ்துவினாற் கொடுக்கப்பட்ட வழுவின்றிப் போதிக்கும் அதிகாரத்தைக் கொண்டு ''திரிதெந்தின்'' (Trent) பொதுச்சங்கத்தின் 4வது அமர்வில் (1546 ஏப்ரல் 8-ந் திகதி) திட்டவட்டமாகத் தீர்மானித்து பிரகடனப்படுத்தியுள்ளது. இவை வருமாறு:

## திருமறைநூலில் அடங்கியுள்ள நூல்கள்

### பழைய ஏற்பாடு

1. ஆதி ஆகமம்
2. யாத்திரை ஆகமம்
3. லேவியர் ஆகமம்
4. எண் ஆகமம்
5. உப ஆகமம்
6. யோசுவா ஆகமம்
7. நீதிபதிகள் ஆகமம்
8. ரூத் ஆகமம்
9. சாமுவேல் ஆகமம் I
10. சாமுவேல் ஆகமம் II
11. அரசர் ஆகமம் I
12. அரசர் ஆகமம் II
13. நாள் ஆகமம் I
14. நாள் ஆகமம் II
15. எஸ்ரா ஆகமம்
16. நெகேமியா ஆகமம்
17. தொபியாசு ஆகமம்
18. யூடித் ஆகமம்
19. எஸ்தர் ஆகமம்
20. யோபு ஆகமம்
21. சங்கீதங்கள்
22. பழமொழி ஆகமம்
23. சங்கத்திருவுரை ஆகமம்
24. உன்னத சங்கீதம்
25. ஞான ஆகமம்
26. சீராக் ஆகமம்
27. இசையாஸ் ஆகமம்
28. எரேமியாஸ் ஆகமம்
29. புலம்பல் ஆகமம்
30. பாரூக் ஆகமம்
31. எசெக்கியல் ஆகமம்
32. தானியேல் ஆகமம்
33. ஓசே ஆகமம்
34. யோவேல் ஆகமம்
35. ஆமோஸ் ஆகமம்
36. அப்தியாஸ் ஆகமம்
37. யோனாஸ் ஆகமம்
38. மிக்கேயாஸ் ஆகமம்
39. நாகூம் ஆகமம்
40. அபாக்கூக் ஆகமம்
41. செப்போனியாஸ் ஆகமம்
42. ஆகாய் ஆகமம்
43. சக்கரியாஸ் ஆகமம்
44. மலக்கியா ஆகமம்
45. மக்கபே ஆகமம் I
46. மக்கபே ஆகமம் II

### புதிய ஏற்பாடு

1. மத்தேயு எழுதிய நற்செய்தி நூல்
2. மாற்கு எழுதிய நற்செய்தி நூல்
3. லூக்காஸ் எழுதிய நற்செய்தி நூல்
4. அருளப்பர் எழுதிய நற்செய்தி நூல்
5. அப்போஸ்தலர் பணி
6. புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகம்
7. ,, ,, கொரிந்தியருக்கு எழுதிய திருமுகம் I
8. ,, ,, கொரிந்தியருக்கு எழுதிய திருமுகம் II
9. ,, ,, கலாத்தியருக்கு எழுதிய திருமுகம்
10. ,, ,, எபேசியருக்கு எழுதிய திருமுகம்
11. ,, ,, பிலிப்பியருக்கு எழுதிய திருமுகம்
12. ,, ,, கொலோசியருக்கு எழுதிய திருமுகம்
13. ,, ,, தெசலோனிக்கேயருக்கு எழுதிய திருமுகம் I
14. ,, ,, தெசலோனிக்கேயருக்கு எழுதிய திருமுகம் II
15. ,, ,, திமோத்தேயுவுக்கு எழுதிய திருமுகம் I
16. ,, ,, தீமோத்தேயுவுக்கு எழுதிய திருமுகம் II
17. ,, ,, தீத்துவுக்கு எழுதிய திருமுகம்
18. ,, ,, பிலமோனுக்கு எழுதிய திருமுகம்
19. ,, ,, எபிரேயருக்கு எழுதிய திருமுகம்
20. ,, யாகப்பர் எழுதிய திருமுகம்
21. ,, இராயப்பர் எழுதிய திருமுகம் I
22. ,, இராயப்பர் எழுதிய திருமுகம் II
23. ,, அருளப்பர் எழுதிய திருமுகம் I
24. ,, அருளப்பர் எழுதிய திருமுகம் II
25. ,, அருளப்பர் எழுதிய திருமுகம் III
26. ,, யூதா எழுதிய திருமுகம்
27. ,, திருவெளிப்பாடு நூல்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

# நீங்கா நினைவுகள்

*ஜெருசலேம் நகரில் ஓராண்டுகாலம் வேதாகமப் பயிற்சியை முடித்து அண்மையில் நாடுதிரும்பிய*

## அருள்தந்தை A. C. கிறிஸ்தோப்பருடன் சில மணித்துளிகள்

★ **வாக்களிக்கப்பட்ட பூமி என்ற உணர்வு இன்றும் யூதர்கள் மத்தியில் இருக்கின்றதா என்பதை உங்களால் கூற முடியுமா ?**

ஆம், பலஸ்தீன் நாடு குலமுதல்வர்களின் கடவுளால் கொடுக்கப்பட்ட பூமி என்பதை யூதர்கள் இன்றும் ஆழமாக நம்புகின்றனர். அந்நியர் படையெடுப்பினால் யூதர்கள் நாட்டை விட்டு சிதறி ஓடினாலும் 1948ஆம் ஆண்டில் சுதந்திரம் கிடைத்ததும் மீண்டும் தமது வாக்களிக்கப்பட்ட பூமியை காப்பாற்ற இரத்தம் சிந்திப் போராடினார்கள். மீட்பு வரலாற்றில் முக்கியத்துவம் வகிக்கும் ஆபிரகாம், ஈசாக்கு, சாமுவேல் போன்ற மூதாதையருடைய கல்லறைகளையும் பெத்சேபா போன்ற இடத்தையும் தமது முழுக்கட்டுப்பாட்டில் வைத்துக் காப்பாற்றி வருகின்றனர்.

★ **பல சமயங்கள் காணப்படுகின்ற வேளையில் குறிப்பாக ஜெருசலேமில் ஒற்றுமை நிலவி வருகின்றதா ?**

ஆம், வியத்தகு முறையில் பல சமயங்களும் சபைகளும் ஒற்றுமையுடன் செயல்படுவதை நான் அங்கு கண்டேன். ஆர்மேனியன், கொப்டிக், கிழக்கு-நாட்டுத்திருச்சபை. சீரியன் கத்தோலிக்கர், எத்தியோப்பிய சபை, யூதர், இஸ்லாமியர், மற்றும் கத்தோலிக்கர் ஆகியோர் ஜெருசலேம் பழைய நகரில் நிறைந்து காணப்படுகின்றனர். இவர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கக் கூடிய முக்கிய காரணிகள் பழைய ஏற்பாடும், அதில் காணப்படும் குல முதல்வர்களுமே. இவர்களுள் ஆபிரகாம் குறிப்பிடத் தக்கவர். ஜெருசலேமில் உள்ள இயேசுவின் கல்லறை ஆலயத்தில் மேற்குறிப்பிடப்பட்ட சபைகள் சூழ்ந்து வாழ்கின்றனர். பல சபைகளும் பிரச்சனையின்றி தத்தம் வழிபாடுகளை ஒரே ஆலயத்தில் சீராக நடாத்துவது சாத்தியம் ஆகிறது. நாடு சுதந்திரம் பெற்றதின் பின் பிரித்தானிய அரசாங்கம் பல சபைகளின் வழிபாட்டுக்குரிய ஒழுங்கமைப்பை உருவாக்கிக் கொடுத்தது. இன்று இந்த ஒழுங்கமைப்புக்கு உரிய வகையில் ஒற்றுமையுடனும், கூடிய புரிந்துணர்வுடனும் பல சபைகளும் ஒரே இடத்தில் வழிபாடுகளை நடாத்துவது அனைவருக்கும் வியப்பூட்டும் ஒரு செயலாகும்.

★ **அந்நியருடைய ஆக்கிரமிப்பில் இருந்து வாக்களிக்கப்பட்ட பூமி முழுமையாக மீட்கப்பட்டுள்ளதா?**

ஜெருசலேம் ஆலயம் அமைக்கப்பட்டிருந்த இடமும் அதன் நிலப்பரப்பும் இன்னும் மீட்கப்படவில்லை. சீலோவாம் குளம் ( அருளப்பர் 9: 1–7 ) போன்ற பகுதி இன்னும் இஸ்லாமியருடைய ஆட்சியிலேயே இருக்கின்றது. ஜெருசலேமின் பழைய சுவரின் கீழ் இன்றும் யூதர்கள் புலம்பி அழும் உருக்கமான காட்சியைக் காணமுடிகின்றது.

**செவ்வி நடாத்தியவர் அருள்திரு. J. நீக்கிலஸ்**

**எதிர்பாருங்கள்...... அடுத்த இதழில்...**
சினா விஜயம் செய்த அருள்திரு S. M. செல்வரத்தினம் o. m. i. (கரவையூர் செல்வம்) அடிகளாருடனான செவ்வி.

## புனித வின்சென்ற் டி போல் சபை

புனித வின்சென்ற் டி போல் சபையானது தருமப் பணி புரியும் உலகளாவிய ஓர் அப்போஸ்தலிக்க இயக்கமாகும். இச்சபையானது பிறட்றிக் ஓசானாம் என்பவரை தலைவராகக் கொண்ட பல் கலைக்கழக மாணவர்களால் பரீஸ் நகரில் 1833ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இச்சபையின் பாதுகாவலர் புனித வின்சென்ற் டி போல் ஆவர். இவர் இறந்த தினமாகிய செப்டம்பர் 27 ஆம் திகதி உலக நாடுகள் பலவற்றில் கொண்டாடப்படுகிறது.

1956 நவம்பர் 27 ஆம்திகதி மிலான் நகர சர்வகலாசாலை மாணவர் மகாநாட்டில் 6–வது சின்னப்பர் பாப்பரசர் உரை நிகழ்த்துகையில் வின்சென்ற் டி போல் சபையினர் பற்றி அளித்த வியாக்கியானம்:

'முதலில் ஓர் குழாம்
பின்னர் ஓர் படையாகி
அதன் பின்னர் உலகளாவியது'.

வடபகுதியில் முதலாவது வின்சென்ற் டி போல் பிரந்தியசபை 02–10–1976 இல் ஆயர் அதி வண கலாநிதி வ. தியோகுப்பிள்ளை அவர்களால் மன்னாரில் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இன்று யாழ்ப்பாணம், மன்னார் மறைமாவட்டங்களில் ஏறக்குறைய 600 பணியாளர்கள் 50 பந்திகளில் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள்.

கருணை, தனிநபர் சேவை–
பொருளுதவி
இதுவே நல்ல சமாரித்தன் பண்பு.

இதுவே
புனித வின்சென்ற் டி போல் சபையின்
இலட்சியமாகும்.

எஸ். லியோ. எதிர்மன்னசிங்கி
உப. தலைவர். தேசிய சபை
இலங்கை புனித வின்சென்ற் டி போல் சபை.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 41ஆம் நாள் நினைவு

ஞா. கிதெபொன்கலன்
தாவீதுப்பிள்ளை
(முதலாளி கணக்கர்)



ஜனனம் 25–09–1940
அகாலமரணம் 20–08–1992

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை இருகரம் கூப்பி வேண்டி நிற்கும்.

மனைவி–நவமணி
பிள்ளைகள்
உற்றார் உறவினர்கள்
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

## கத்தோலிக்க... திருமறைநூலுக்கு விளக்கம் கூறுபவர் யார்?

கிறிஸ்து பரலோகத்திற்கு எழுந்தருளமுன் தாம் கொண்டு வந்த நற்செய்தியையும் இறைவன் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எபிரேய மக்களுக்கு வெளிப்படுத்திய மறையுண்மைகளையும் தம் அப்போஸ்தலர்களிடம் ஒப்படைத்து அவற்றைப் பாதுகாத்து எல்லா மக்களுக்கும் போதிக்கும்படி கட்டளையிட்டார். 'விண்ணிலும் மண்ணிலும் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்... நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள். இதோ நான் உலக முடிவு வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்,' (மத். 23:19-20) என்று கூறினார். ஆகவே ''எழுதப்பட்ட அல்லது மரபு வழிவந்த இறைவனின் வார்த்தைக்கு அதிகாரபூர்வமான பொருள் விளக்கம் செய்யும் பொறுப்பு இயேசுக்கிறிஸ்துவின் பெயரால் அதிகாரம் செலுத்தும் திருச்சபையின் உயிருள்ள ஆசிரியத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது'' (2ஆம் வத்திக்கான் இறைவெளிப்பாடு இல. 10) எனவே, திருமறை நூலில் அடங்கியுள்ள விடயங்களுக்குத் தனி நபர் எவரும் அதிகாரபூர்வமான விளக்கம் கொடுக்க முடியாது.

## ஞாயிறு வழிபாட்டு வாசகம்

ஞாயிறு வழிபாட்டு வாசகங்களை நூல் வடிவத்தில் வெளியிடவுள்ளோம். மூன்று ஆண்டு வாசகங்களும் மொத்தமாக ரூபா 230/-க்கு விற்பனைக்குண்டு. அடுத்துவரும் திருவழிபாட்டு ஆண்டிலிருந்து வாசகங்களை அச்சிட்டு விநியோகிக்க மாட்டோம்.

## காவலன் கண்மணிகள்

ஒளி: 6
சுடர்: 17

### எம் விழிகளின் ஒளி யேசு
### எம் வாழ்வின் வழி யேசு

அன்புக்கினிய கண்மணிகாள் !

கட்டுப்பாடற்ற நிலையில் கட்டுப்பாடாக வாழ சுய கட்டுப்பாட்டை நாம் கற்கவேண்டும்,

தனக்குத்தானே வரையறுத்துக்கொள்ளும் ஒழுங்கு முறைகளே சுய ஒழுங்கு அல்லது சுய கட்டுப்பாடு எனப்படும்.

கல்விக் கூடத்தின் சட்டதிட்டங்களுக்கு பணிந்து நடப்பது நம் கடமை. இக்கடமையைச் சரிவரச் செய்யின் நாளைய உலகில் நல் மகனாக வாழ்ந்து சமுதாய மேம்பாட்டுக்காக உழைக்க முடியும்.

தன்னலத்தைக் காட்டிலும் பிறர்நலம் போற்றி வாழ்வதை இறையேசு விரும்புகிறார் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்வழி வாழ சுய கட்டுப்பாட்டை உங்களில் உறுதியாக்குங்கள்.

கைக்குக் கிடைக்கும் பணத்தை ஒரு ஒழுங்கு முறைக்குள் செலவு செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் உணவினை உண்டு உபத்திரப்படாதீர்.

இறையேசுவின் அன்புக் கண்மணிகாள் ''மக்கள் உங்கள் நற் செயல்களைக் கண்டு வானகத்திலுள்ள உங்கள் தந்தையை மகிமைப்படுத்தும்படி உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்வதாக''

மத். 5 : 16

என்று அன்று அருள்நாதர் கூறிய வார்த்தையை இதயத்தில் பதித்து வாழ அருள் வேண்டும்.

அன்பின்
அன்பு விழி

*அடுத்த சுடரில் கதை வரும்*


## ST. PATRICK'S COLLEGE, JAFFNA
## பிரவேச விண்ணப்பம் — 1993

பின்வரும் வகுப்புகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**முதலாம் ஆண்டு : 01–02–87 — 31–01–88க்குள் பிறந்திருக்க வேண்டும்.**
**நான்காம் ஆண்டு : 1984 இல் பிறந்திருக்க வேண்டும்.**
**ஆறாம் ஆண்டு : 1982 இல் பிறந்திருக்க வேண்டும்.**
**ஒன்பதாம் ஆண்டு : 1979 இல் பிறந்திருக்க வேண்டும்.**

★ விண்ணப்பப்பத்திரம் ரூபா. 75-00 (பரீட்சைக் கட்டணம் உட்பட) 01–10–1992 தொடக்கம் 21–10–1992 வரை பாடசாலை நாட்களில் கல்லூரிக் காரியாலயத்தில் காலையில் நேரில் வந்து கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படும்.

★ நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 24 10–1992 ஆம் திகதிக்கு முன் கல்லூரிக் காரியாலயத்தில் காலை 9–00 — 12–00 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ பிரவேசப் பரீட்சைத் தினம் 07–11-1992 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

★ 6 ஆம் 9 ஆம் வருட வகுப்புகளுக்கு நடத்தப்படும் பிரவேசப் பரீட்சையில் திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமைபோல் யாழ் ஆயரது புலமைப்பரிசில் வழங்கப்படும்.

★ கத்தோலிக்க மாணவரெனின், அதை அத்தாட்சிப்படுத்தும் பங்குத் தந்தையின் கடிதமொன்றை விண்ணப்பப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

★ தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**கல்லூரி அதிபர்** A/40.92



## திருவழிபாட்டு நாட்காட்டி 1993

மேற்படி நாட்காட்டி எமது நிலையத்தால் வெளியிடப் படவுள்ளது. ஒரு பிரதியின் விலை ரூபா 40/- உங்களுக்கு தேவையான பிரதிகளை ஐப்பசி 30ஆம் திகதிக்கு முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

திருவழிபாட்டு நிலையம்
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்

**அருள்திரு. ஜே. நீக்கிலஸ்**

A/41/92

# செய்திச் சாறு

★ கடந்த 45 வருடங்களாக திருப்பீடத்துடன் எவ்வித தொடர்புமின்றி இருந்த அல்பேனியா கடந்த வருடம் வத்திக்கானுடன் முழு அரசியல் உறவை உருவாக்கியது,

★ 29-9-92 அன்று வத்திக்கானில் இறந்த கருதினால் ஜாக் கோஸ் மார்டின் மீது தன் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கும் இரங்கல் செய்தியை அனுப்பியுள்ளார் திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர்'

★ எய்ட்ஸ் நோய் தடுப்பு மருந்துகள் விரைவில் கண்டு பிடிக்கப்பட வேண்டுமென்று தன் ஆவலை வெளியிட்டார் அன்னை திரேசா.

★ இந்தியாவில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பழங்குடியினர், மற்றும் ஹரிஜனர் மீதான அட்டூழியங்கள் குறித்து அரசு பாராமுகமாக இருப்பது தெரிவதாக ஒற்றை நீதி மன்ற முன்னாள் நீதிபதி கிருஷ்ணஐயர் கூறினார்.

★ எல்சல்வடோரில் உள்நாட்டு போரின் போது மனித உரிமைகள் மீறல்கள் நடந்ததாகக் குற்றம் சாட்டப்படும் இராணுவ அதிகாரிகள் செயல்கள் அறிவிக்கப்பட வேண்டுமென அந்நாட்டு கத்தோலிக்க திருச்சபை கூறியது.

★ கோஸ்தாரிக்காவில் அமைதிப் பேச்சு வார்த்தைகளின் போது புரட்சியாளர் ஒருவரால் கொண்டோராஸ் ஆயர் லூயிஸ் சாந்தோஸ் புதன் இரவு விடுவிக்கப்பட்டார்.

★ சீனாவிற்கும் திருப்பீடத்திற்கு மிடையே உள்ள அரசியல் உறவை உருவாக்குவது குறித்து இசைவு விரைவில் காணப்படும் என சீனா மக்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாக அந்நாட்டு ஆயர் கூறினார்.

### இலங்கையில்

## நேர்மையின்மை, லஞ்சம், ஊழல் பெருகிவருகிறது • ஆயர்கள் கண்டனம்

பத்திரிகைகள் தவறான செய்திகளை வெளியிடுவதாகவும் அரசின் பொருளாதாரக் கொள்கைகளிலும் மேலும் ஏழைகளே பெருகி வருவதாகவும் சிறிலங்காவின் கத்தோலிக்க ஆயர்கள் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளனர். பொருளாதார அரசியல் மற்றும் ஏனைய பிரச்சனைகளில் இருந்து மக்களைக் காப்பாற்ற முயற்சிகளை மேற்கொள்ளாத அரசியல் தலைவர்களிடம் மக்கள் நம்பிக்கை இழந்து வருவதாக உரைத்த ஆயர்கள் நாட்டின் உள்நாட்டுப் போருக்கு அரசியல் தீர்வுகாண வேண்டுமென அவ் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

இதுவரை அரசால் கொண்டுவரப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் நாட்டு வளங்களின் நீதியான பங்கேற்பிற்கு எவ்வகையிலும் உதவாதது மட்டுமல்ல, ஏழை பணக்கார இடைவெளியை அதிகரித்துள்ளன என்கின்றனர் ஆயர்கள். ஏழ்மை அதிகரிப்பதால் குற்றங்களும், வன்முறைகளும் நேர்மையின்மையும், லஞ்சமும் ஊழலும் பெருகிவருவதாக கூறும் ஆயர்கள் பத்திரிகைச் சுதந்திரமும், மனித உரிமைகளுக்கான மதிப்பும் மீறப்பட்டுவருவதாக மேலும் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

## சர்வமத அமைதி ஊர்வலம்

'மதங்கள் போரை விரும்புவதில்லை. அதற்கு மாறாக அவற்றின் இதயத்தில் ஆழத்தில் அமைதியே குடிகொண்டுள்ளது' என்று மதம் பற்றிய சர்வதேச கூட்டத்தின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கை கூறுகின்றது. பெல்ஜியம் தலத்திருச்சபையாலும் கான் இகிதியோ என்ற கத்தோலிக்க பிரதிநிதிகள் குழுவாலும் பெல்ஜியத்தின் லூவேன் எனும் இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட 3 நாள் கூட்டத்தில் கிறிஸ்தவ, இந்து, இஸ்லாம், யூத மற்றும் புத்த மதப் பிரதிநிதிகள் அமைதி ஊர்வலம் ஒன்றையும் மேற்கொண்டனர். 'உலக அமைதிக்கான நம்பிக்கையைத் தெரிவிக்கும் விதத்தில் மதப் பிரதிநிதிகள் இவ் ஊர்வலத்தை நடத்தினர். அமைதியையே விரும்பும் மதங்கள் முரண்பாடுகள் போர்களுக்குக் காரணமாக விளங்கக் கூடாது என்பது குறித்து மதப்பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

## புதிய திட்டத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கான சர்வதேச நிதி நிறுவனமான I. S. A D. நைஜீரியா, சீராலியோன், சீரியா ஆகிய நாடுகளின் முன்னேற்றத்திற்காகவும் கடனுதவிகளை வளங்குவதாக அறிவித்தது.

### படுகொலை செய்யப்பட்டவர்களின்

## நினைவு வழிபாடு

பிரான்சில் 200 ஆண்டுகளுக்கு முன்பு படுகொலை செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான குருக்களின் நினைவுத் திருவழிபாட்டை 50 ஆயர்கள் ஞாயிறன்று நிகழ்த்தினர். பிரஞ்சு புரட்சியின் போது 1892 ஆம் ஆண்டு பாரிஸ் சிறைகளில் சுமார் 300 திருச்சபை அங்கத்தினர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களில் 191 பேரை 1926 ஆம் ஆண்டில் திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் முத்திபேறு பெற்றவர் எனவும் அறிவித்தார். பிரஞ்சு புரட்சியின் போது நூற்றுக்கணக்கான குருக்கள் உட்பட ஏறத்தாழ 4600 பல் சமயப் போதகர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் அல்லது சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

## குழந்தைகள் உயிரிழக்கும் அபாயம்

ஆசியநாடுகளின் நல ஆதரவுப்பணிகள் மேலும் மேம்படுத் தப்படவில்லையெனில் 2000-ம் ஆண்டிற்குள் 5 கோடி குழந்தைகள் உயிரிழக்கும் அபாயம் இருப்பதாக யுனிசெவ் நிறுவன உயர் இயக்குனர் தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற ஏழு தென்னாசிய பிரதிநிதிகளின் கூட்டத்தில் உரையாற்றிய யுனிசெவ் உயர் இயக்குனர் ஜெம்ஸ் பாண்ட் நல ஆதரவுப்பணிகள் குறைவாக இருப்பதும், அதனால் குழந்தைகளின் உயிரிழப்புக்கள் தொடர்வதும் வளர்ச்சிக்குத் தடையாகும் என்றார். இலங்கையின் உள்நாட்டுப் போர் பற்றிக் குறிப்பிட்ட அவர் எத்தகைய மோதல்களிலும் முரண்பாடுகளிலும் குழந்தைகள் பாதிப்படையக் கூடாது என்ற விண்ணப்பத்தையும் முன்வைத்தார். உலகில் மொத்தக் குழந்தைகளுள் 20 வீதத்தினர் இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பூட்டான், மாலைதீவு, இலங்கை ஆகிய தெற்காசிய நாடுகளில் வாழ்கின்றனர். இதில் பெரும்பான்மையினர் ஏழ்மை, நோய், கல்வியின்மை, சுரண்டல் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## 21 பேருக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அயர்லாந்து நாட்டில் 16ஆம் நூற்றாண்டில் திருமறைக்காக உயிரிழந்த 4 ஆயர்கள், 6 குருக்கள், 1 துறவறச்சபை சகோதரர், 6 பொதுநிலையினர், மேலும் ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த துறவறத்தார் 3 பேர், பிரான்ஸ் நாட்டின் அருட் சகோதரி ஒருவர் என 21 இறையடியார்கள் முத்திப் பேறு பெற்றவர்கள் என அறிவித்தார் திருத்தந்தை.

### தீமைகளுக்கு எதிராகப் போராட

## இளைஞருக்கு அழைப்பு

இளைஞர்கள் நாட்டின் சமுக அரசியல் விவகாரங்களைத் தெளிவுற அறிந்து சமூகத்திற் காணப்படும் தீமைகளுக்கெதிராய் உறுதியுடன் போராடவேண்டுமென அழைப்பு விடுத்தார் கோட்டார் ஆயர். கோட்டார் மறைமாவட்ட இளைஞர் அவையினால் நடாத்தப்பட்ட இளைஞர் மகாநாட்டில் கலந்து கொண்ட 700 க்கு மேலான இளைஞர்களிடம் இவ்வாறு கூறினார் ஆயர் லியோ தர்மராஜ். இதற்கிடையே இளைஞர்களும் வேலைவாய்ப்பு, சமய இணக்கம், அத்தியாவசியப் பொருட்கள் மீதான விலை வாசிக் குறைப்பு, மீனவர்களின் வசதியீனங்கள் போன்றவற்றிற்காக நாகர் கோவிலில் ஊர்வலம் நடாத்தி சமுகத் தீமைகளுக்கெதிராய்ப் போராடுவதற்கு உறுதியும் வழங்கினார்.

## சிறுவர் நடாத்திய அமைதிப் போராட்டம்

கம்பளம் பின்னும் தொழிற்சாலையில் தாங்கள் நடாத்தப்படும் தரக்குறைவான வழிகளை நீக்கவேண்டுமென இந்தியத் தலைநகரின் தொழில் அமைப்புகளின் முன்னால் ஏறத்தாழ 160 சிறுவர்கள் எழுச்சி ஊர்வலம் ஒன்றை வெள்ளியன்று மேற்கொண்டனர். 14 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தடை செய்யப்படவேண்டுமென அமைதிப் போராட்டம் நடத்திய சிறுவர்களில் பெரும்பான்மையினர் 14 வயதிற்கும், 7 வயதிற்கும் உட்பட்டவர்கள். "நாங்கள் குழந்தைகள், அடிமைகள் அல்ல, குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துங்கள், சிறுவர்களால் பின்னப்பட்ட கம்பளங்களை வாங்காதீர்கள்'' என்ற அட்டைகளைத் தாங்கிச் சென்ற இவர்கள் தாங்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட இடங்களில் நடாத்தப்படும் முறைகள் குறித்தும் பத்திரிகையாளரிடம் முறையிட்டனர். ஆசிய நாடுகளில் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 10 லட்சத்திற்கு மேற்பட்ட சிறுவர்கள் தொழிலாளிகளாக உள்ளனர். இவர்கள் ஒவ்வொரு நாளும் 15 முதல் 18 மணித்தியாலங்கள் வரை வேலை செய்யக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இந்தியாவில் மட்டும் 3 லட்சத்திற்கு மேற்பட்ட சிறுவர்கள் கம்பளம் பின்னும் தொழிற்சாலைகளில் பணிபுரிகின்றனர்.

## அரசியல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனமற்றவர்போல் தோன்றுகிறது. எங்கள் அரசியல் தலைமைத்துவத்தில் தூய்மையான தேசாபிமானம் அற்றிருப்பது வருத்தத்துக்குரியது.

தீர்க்கமான மனத்துணிவுடன் விரைவான தீர்வைக் காண்பதற்கு, எங்கள் தேசத்தில் கொழுந்துவிட்டெரியும் விடயங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, 'அரசாங்கமும் எதிரணியினரும் எங்கள் மக்களின் பரிதாப நிலையை உலோபித்தனமான போக்குடன் நோக்கி தங்கள் சொந்த நலன்களையும் இலக்குகளையும் அடைய, இவ் அவல நிலையை பயனுடையதாக்கிக் கொள்ளுகின்றனர்.

ஒரு சிலர் தங்களின் சொந்த இலக்குகளைப் பெற மட்டு மீறிய தன்னாட்டுப்பற்றை ஊக்குவிக்கும் மனப்பாங்கை மக்கள் மத்தியில் தூண்டிவிட முயலுகின்றனர்.

நாட்டின் மேலான நலனுக்காக பொது மக்கள் தம் மதிப்பைத் தியாகம் செய்ய அரசியல் வாதி எவரும் ஆயத்தமாயிருப்பது போல் தோன்றவில்லை.

இந்நாட்டை அதன் பொருளாதார, அரசியல், மற்றும் கேடுகளிலிருந்து தங்கள் அரசியல் தலைவர்கள் விடுக்க இயலாதவரென்பதை அதிகமான மக்கள் திட்டமாகக் கண்டு கொண்டுள்ளனர்.

## யாழ் - மறைவட்டத்தில் குருவாக பணிபுரிய நீ விரும்புகிறாயா?

- க. பொ. த. ( உ/த ) பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தி பெற்றவர்கள்,
- க. பொ. த. ( சா/த ) பரீட்சையில் சித்தி பெற்று, க. பொ. த. ( உ/த ) பயில தகுதியுடையவர்கள்,
- 1993 இல், 9ஆம் ஆண்டில் கல்வி பயிலவிருப்பவர்கள்.

பங்குத் தந்தை மூலம் ஐப்பசி மாதம் 15ஆம் திகதிக்கு முன்பு எம்முடன் தொடர்பு கொள்க.

அதிபர்

புனித மாட்டீனார் குருமடம்,
யாழ்ப்பாணம்

A/39

**வீடெல்லாம் யேசுநாமம் ஒலிக்கவேண்டும்,**
**பாரெல்லாம் சுவிஷேசம் பரவவேண்டும்.**

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இல. QB/1001/58/81